## தேர்ந்து தெளிதல்

### செவிமடுத்தலில் இருந்து செயல்

பெரிய குழுவிற்கு திரும்புதல்

ஒவ்வொரு சிறிய குழுவும் தாங்கள் “நாம்” என்ற கண்ணோட்டத்தைப் பகிர்ந்துகொள்ளவும், தூய ஆவியார் எதற்கு அழைத்தார் என்று உணர்வதில் கவனம் செலுத்தவும் அழைத்தல். அதிசவாக, அன்றாட வாழ்க்கையில் ‘எளிய செயலைச் செய்ய’ வேரூன்ற உதவும் ஒரு வார்த்தையை அடையாளம் காணுதல்

அதிச வாக ஒன்றிணைந்து, அன்றாட வாழ்வில் இறைவார்த்தை வேரூன்ற உதவும் ஒரு எளிய செயலை செயலாற்றும் ஒரு நகர்வை அடையாளம் காணுங்கள். எடுத்துக்காட்டாக:

- தனிநபர்களாக, நமது குடும்ப உறுப்பினர்களுடன் பகிர்ந்துக் கொள்ளக்கூடிய ஒருவருக்கொருவர் துணையாக இருக்கும் தருணங்களைத் தேடுவது.
- குடும்பங்களாக - ஒவ்வொரு வாரமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை கைபேசிகள் அல்லது பிற கவனச்சிதறல்கள் இல்லாமல், ஒன்றாக இறைவேண்டல் செய்ய, மறைநூல்களை வாசிக்க அல்லது ஒன்றாக உணவு உண்ணத் தேர்ந்தெடுப்பது.

## பரிந்துரை இறைவேண்டல்

வழிநடத்துனர் பங்கேற்பாளர்களை சுருக்கமான இறைவேண்டலைச் செய்ய அழைத்தல்.

எடுத்துக்காட்டு:

.......“ஆண்டவரே, என் குடும்பத்துடன் ஒன்றித்து நடக்கும் அருளைத் தந்தருளும்”

பதிலுரை: ஆண்டவரே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.

நிறைவாக, ஆண்டவர் கற்றுத் தந்த இறைவேண்டல், தமதிரித்துவ புகம் (தந்தைக்கும் மகனுக்கும் தூய ...) மற்றும் அமைதியை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளுங்கள்

## முடிவு பாடல்:

பொருத்தமான பாடலை பாடலாம் அல்லது இசைக்கலாம்.



Published by:
Peninsular Malaysia Pastoral Team

Email:
api@archkl.org

INTERNAL CIRCULATION ONLY

மே 2026

# அதிசசிந்தனை

ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்

மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்

### மாதாந்திர நோக்கம்:

### குடும்பம் - ஒன்றித்து நடத்தல்

திருத்தந்தை பிரான்சிஸ் ஒருமுறை கூறினார், “இன்று திருஅவைக்கு மிகவும் தேவைப்படுவது, காயங்களை ஆற்றும் திறனும் நம்பிக்கையாளர்களை அரவணைக்கும் இதமான இதயங்களும் தேவை. அதற்கு நெருக்கமும், அருகில் இருப்பதும் தான் தேவை. எளிமையாகச் சொன்னால், இதுவே ஒன்றித்து நடத்தல்

திருஅவையானது, அருள்பணியாளர்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் என அனைவரையும் இந்த ‘ஒன்றித்து நடத்தல்’ என்னும் கலையில் ஈடுபடுத்தவேண்டும். இது பிறருடைய புனிதமான நிலத்தின்முன் நமது காலணிகளைக் கழற்ற நமக்குக் கற்றுகொடுக்கிறது (விடுதலைப் பயணம் 3:5) (நற்செய்தியின் மகிழ்ச்சி 169)

வேறுவிதமாகக் கூறினால், நமது வசதியான எல்லைகளைத் தாண்டிச்சென்று, ஒவ்வொருவரின் பாதையின் தனித்துவம், சிக்கலான தன்மை மற்றும் புனிதத் தன்மையை மதித்து, மற்றவர்களுடன் பயணிக்க நாம் அழைக்கப்படுகிறோம். இதன்மூலம், நாம் அனைவரும் ஒன்றாக உருமாற்றம் அடைகிறோம். கிறிஸ்துவிடம் நெருங்கிச்சென்று இதயத்தில் ஒரு ஆழமான மனமாற்றத்தை அனுபவிக்கிறோம்.

நம்பிக்கை, அன்பு மற்றும் இரக்கத்துடன் அன்றாட வாழ்க்கையில் வாழ்ந்துகாட்டும் குடும்பமாகிய, தலத்திருஅவையான குடும்பத்தைவிட இது வேறு எங்கு இவ்வளவு நெருக்கமாக சாத்தியமாகும்?



# எதிர்கொள்வது

## தொடக்கப்பாடல்

பரிந்துரை: இயேசுவில் இணைந்திட இறைமையில் (0030–Bibleintamil.com)

## தொடக்கச் செபம்

விண்ணகத் தந்தையே, நாங்கள் ஒருவருக்கொருவர் அன்புடன் வழிநடத்த எங்களுக்குக் கற்றுத்தாரும். எளிதானதைத் தாண்டிச்செல்லவும், ஒவ்வொருவரையும் பொறுமையுடனும் மரியாதையுடனும் கவனித்துக்கொள்ளவும், உதவியருளும். எங்கள் இல்லங்களை இறைவேண்டல், இரக்கம் மற்றும் மன்னிப்பின் இடங்களாக மாற்றியருளும். ஒவ்வொரு நாளும் ஒருவர் மற்றவருக்கு செவிகொடுக்கவும், ஆதரவளித்து ஒன்றாக மன்றாடவும், அருள்புரியும். இதனால் எங்கள் இல்லங்கள் குணமளிக்கும் இடங்களாகவும், உமது உடனிருப்பை அனுபவிக்கும் இடமாகவும், உலகத்துடன் நம்பிக்கை பகிர்ந்துகொள்ளப்படும் இடமாகவும் மாறுவனவாக. ஆமென்.



## மேய்ப்புப்பணிப் பாதை

திருஅவை, வட்டாரங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் ‘ஒன்றித்து நடத்தல்’ என்ற வார்த்தை பரவலாகப் பயன்படுத்தப்படும் ஒரு சொற்றொடராக மாறியிருந்தாலும் , உண்மையில் அது குடும்ப வாழ்க்கையில் ஆழமாக வேரூன்றியுள்ளது. குடும்பத்தில் தான் ஒன்றித்து நடப்பது முதலில் கற்றுக்கொள்ளப்பட்டு வாழ்ந்து காட்டப்படுகிறது. அது வீட்டில் தொடங்கி வாழ்நாள் முழுவதும் விரிவடைகிறது.

துன்ப நேரங்களிலும் மகிழ்ச்சியான நேரங்களிலும் ஒரு குடும்பமாக ஒருவருக்கொருவர் ஆதரவாக ஒன்றுகூடி பகிர்ந்துகொள்ளப்படும்போது ஒன்றித்து நடப்பது மேலும் வடிவமைக்கப்படுகிறது. இதுபோன்ற நேரங்களில் அன்பு, மன்னிப்பு, மற்றும் தியாகம் போன்ற செயல்கள் முன்னிலை வகிக்க வேண்டும்.

எப்போதும் கோட்பாடுகளையும் ஒழுக்கத்தையும் சார்ந்திருக்காமல் நாம் ஒருவரையொருவர் பொறுமையுடனும் புரிதலுடனும் அணுகிட அழைக்கப்படுகிறோம். இதன் பொருள் நமது போதனைகளையோ, கொள்கைகளையோ ஒதுக்கி வைப்பது அல்ல; மாறாக, மற்றவருடன் ஒன்றித்து நடப்பதைத் தேர்ந்தெடுப்பதாகும். செவிகொடுக்கும் காதுகள், ஆறுதலைத் தரும் நம்முடைய உடனிருப்பு, மற்றும் மிக முக்கியமாக இணைந்து இறைவேண்டல் செய்வது.

இவ்வாறு இறைவேண்டலிலும், ஆதரவு தருவதிலும் வேரூன்றிய ஒரு குடும்பம் இறைவன் தங்கியிருக்கும் ஒரு தலத்திருஅவையாக இருப்பது மட்டுமல்லாமல், உலகம் குணமளிக்கும் ஒரு மருத்துவமனையாகவும் நம்பிக்கை தரும் கலங்கரை விளக்காகவும் மாறுகிறது.

# இறைவார்த்தை

## கொலோசையர் 3:12-13

நீங்கள் கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள், அவரது அன்பிற்குரிய இறைமக்கள். எனவே, அதற்கிசைய பரிவு, இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை, ஆகிய பண்புகளால் உங்களை அணிசெய்யுங்கள். ஒருவரை ஒருவர் பொறுத்துக் கொள்ளுங்கள். ஒருவரைப்பற்றி ஒருவருக்கு ஏதாவது முறையீடு இருந்தால் மன்னியுங்கள். ஆண்டவர் உங்களை மன்னித்தது போல நீங்களும் மன்னிக்க வேண்டும்.

இன்றைய குடும்பங்களின் உறவுகளை தொடர்புபடுத்தி, வாசித்த இறைவார்த்தையை 3 நிமிடம் அமைதியில் தியானிப்போம்.

# உரையாடல்

## ஆவியில் கலந்துரையாடல்

4–6 பேர் கொண்ட குழுவில் கீழ்க்கண்ட மூன்று சுற்றுகளில் பகிர்ந்துகொள்ளுங்கள். ஒவ்வொரு பகிர்வுக்குப் பிறகும் ஒரு நிமிடம் அமைதியில் இருப்போம்.

**சுற்று 1** “நான்” என்னும் கண்ணோட்டத்தில் (அமைதியில் தியானிக்க தயாராயிருங்கள். அனைவரும் பகிர்ந்துகொள்ளலாம், ஆனால் ஒவ்வொருவரும் 2 நிமிடத்திற்கு மேல் பகிரக்கூடாது. மற்றவருடைய பகிர்வையொட்டி எந்தக் கருத்தும் தெரிவிக்க வேண்டாம்)

- ஒன்றித்து நடத்தல் என்பதைக் கருத்தில் கொண்டு ஒன்றித்து நடக்கும் வகையில் என் குடும்பத்தில் என்னென்ன முயற்சிகளை நான் மேற்கொள்ளமுடியும்?

(ஒவ்வொரு நபரின் பகிர்வுக்கும் நன்றி சொல்லியபின், ஒரு நிமிடம் அமைதி காத்தபின் அடுத்த நபர் பகிர்வைத் தொடங்கலாம்)

**சுற்று 2** “நீங்களும் நானும்” என்னும் கண்ணோட்டத்தில் (இப்போது குழுவில் மற்றவர் பகிர்ந்த கருத்துகளுக்குப் பதில் அளிக்க அழைப்பு – ஒவ்வொருவரும் ஒருமுறை மட்டுமே தங்களுடைய கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளலாம்.)

அனைவரின் கருத்துகளையும் செவிமடுத்தபின்:

- மற்றவர்களிடமிருந்து கேட்டறிந்தபின் எந்தக்கருத்தில் பொதுவான தன்மையைக் காண்கிறேன்

(ஒன்று அல்லது இரண்டு குறிப்புகளைத் தெரிவிக்கவும்)

(ஒவ்வொரு நபரின் பகிர்வுக்கும் நன்றி சொல்லியபின், ஒரு நிமிடம் அமைதி காத்தபின் அடுத்த நபர் பகிர்வைத் தொடங்கலாம்)

**சுற்று 3** – ‘நாம்’ என்னும் கண்ணோட்டத்தில்(இப்போது வழிநடத்துனர் அல்லது பொறுப்பாளர் அனைவரும் பகிர்ந்துகொண்டவற்றில் இருந்து பொதுவான கருத்தைத் தேர்ந்தெடுக்குமாறு அனைவரையும் அழைப்பார்)

- நம் குடும்பங்களில் ஒன்றித்து நடப்பதை நாம் எவ்வாறு இன்னும் சிறப்பாகக் கடைப்பிடிக்கலாம் என்பதைப் பற்றி தூய ஆவியானவர் நமக்கு என்ன கூறுகிறார்?)